# அமலோற்பவ மாதா தேவாலயம்


9 ஜாலான் கெரேஜா, 80100 ஜொகூர் பாரு, ஜொகூர், மலேசியா

Tel: +607-2243034 & H/P: +60 11-5868 3303

Parish Email: office@cicjb.org / Website: www.cicjb.org

Diocesan Website: www.mjdiocese.my


| | | |
|---|---|---|
| பங்கு குருவானவர் | அருட்தந்தை எட்வர்ட் ராயப்பன் | +6012 – 602 0454 |
| துணைப் பங்கு குருவானவர் | அருட்தந்தை கிலெளரன்ஸ் மொதொயு OFM | +6016 – 834 1211 |
| நிரந்தர திருத்தொண்டர் | டீக்கன் ஷெர்மன் குளக் OFS | +6017 - 616 3500 |
| மறைபோதகர் | அருட்சகோதரி கோரத்தி ஹெங் CSCM | +60 11 - 26721120 |
| குமஸ்தா | திருமதி. தெரேச ஒங் | +607 - 224 3034 |
| துணை குமஸ்தா | திருமதி. ஜேன் லொபேஸ் | |
| கணக்காளர் | திருமதி. ஒலிவியா யீ | |
| இறப்பு அடக்க ஒருங்கிணைப்பாளர் | திரு. பெட்ரிக் தான் | +6012 - 786 7280 |

| பங்கு அலுவலக நேரம் |
|---|
| திங்கள் ஓய்வு நாள் |
| செவ்வாய்வெள்ளி 9am – 5.00pm |
| சனி 9am – 4.00pm |
| ஞாயிறு 8.30am – 12.00pm |
| மதிய உணவு நேரம் 12.00pm – 1.00pm |





| | | | | | |
|---|---|---|---|---|---|
| வார நாட்கள் திருப்பலி | ஆங்கிலம் | | | | |
| | திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை – காலை 7.15 மணி | | | | |
| | பெருவிழா நாட்கள் அல்லது சிறப்பு நாட்கள் திருப்பலிகள் காலை 7.00 மணிக்கு நடைபெறும்.. | | | | |
| வார இறுதி நாட்கள் திருப்பலிகள் | மாதத்தின் முதல் சனிக்கிழமை திருப்பலி காலை 7.15 மணி | | | | |
| | மலாய் | ஆங்கிலம் | | மெண்டரின் | தமிழ் |
| | சனிக்கிழமை 4PM | சனிக்கிழமை 6.30PM | ஞாயிறு 7.30AM | ஞாயிறு 10AM | ஞாயிறு 5PM |



1. திருப்பலி காணிக்கை – 20 & 21/07 மொத்தம் RM: (உங்கள் அன்பான காணிக்கைகளுக்கு மனமார்ந்த நன்றி)



| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலாய் - 4PM | RM 2,433.40 | ஆங்கிலம் - 6.30PM | RM 2,656.25 | | |
| ஆங்கிலம் 7.30AM | RM 2,142.45 | மெண்டரின் 10AM | RM 1,939.15 | தமிழ் 5PM | RM 1,064.80 |

2.

| | | |
|---|---|---|
| காணிக்கை – நீங்கள் ஆலயப் பணிக்காக காணிக்கை செலுத்த விரும்பினால், பின்வரும் கருத்துகளுக்காகவும் தேவைகளுக்காகவும் கொடுக்கலாம்: | | |
| 1. பொது | 2. திருப்பலி கருத்துகள் | 3. ஏழைகளுக்கு |
| 4. ஆலய பராமரிப்பு | 5. லார்கின் கல்லறை பராமரிப்பு | 6. குடும்ப மாதாந்திர சந்தா தொகை |

பங்கு அலுவலகத்தில் உங்கள் காணிக்கைகளைக் கொடுக்கலாம். அல்லது மின் பண பரிமாற்றத்தின் (e-transfer) வழியாகவும் நீங்கள் உங்கள் காணிக்கைகளை அனுப்பி வைக்கலாம். நீங்கள் கொடுத்த காணிக்கையின் விபரத்தை எழுத மறவாதீர்கள். எடுத்துக்காட்டாக பொது கருத்துக்காக நீங்கள் காணிக்கை செலுத்த விரும்பினால், "பொது" என்று குறிப்பிடவும்.நீங்கள் கொடுத்த காணிக்கைக்குப் பங்கு ரசீது தேவைப்பட்டால், நீங்கள் செய்த பண பரிமாற்றத்தின் ரசீதை - office@cicjb.org என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

**Beneficiary Account Name: CHURCH OF THE IMMACULATE CONCEPTION**
**Beneficiary Bank: Public Bank Berhad**
**Beneficiary Account No: 3099421333**

3.

| முதியோர் மறைக்கல்வி (RCIA) ஒருங்கிணைப்பாளரின் தொடர்பு எண்கள் | | |
|---|---|---|
| தமிழ் | Mr. Thomas Marisuseh | +6016-757 9474 |
| ஆங்கிலம் | Ms Emmy Jong | +6017-360 5400 |
| மலாய் | Ms. Margarette | +6011-2587 8548 |
| மெண்டரின் | Mr. Matthew | +60 13-968 9538 |

## இவ்வார அறிவிப்புகள்

4. **தூய கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழாவும் மற்றும் திருப்பலிகளும்** – எதிர்வரும் 15/8/2024 – வியாழக்கிழமை அன்று நமது பங்கில் காலை மணி 6.00-க்கு ஆங்கிலத்தில் செபமாலை செபமும் திருப்பலியும் நடைபெறும். அதனை தொடர்ந்து இரவு மணி 8.00-க்கு பன்மொழி செபமாலை செபமும் திருப்பலியும் நடைபெறவுள்ளது.இப்பெருவிழா திருப்பலியில் கலந்து கொள்ள அனைவரையும் வரவேற்கிறோம்.

5. **தீ தடுப்பு மற்றும் பாதுகாப்பு உரையாடல்**, எதிர்வரும் 03/08/2024 சனிக்கிழமை காலை மணி 10 முதல் 11.30 மணி வரை நமது பங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் குறிப்பாக பங்கு மண்டபம் மற்றும் வகுப்பறை வசதிகளை அடிக்கடி பயன்படுத்துபவர்களை பங்கேற்க நமது பங்கு குருவானவர் அருட்தந்தை எட்வர்ட் ராயப்பன் அழைக்கின்றார். மலேசியாவின் தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையுடன் இணைந்து தீ பாதுகாப்பு மற்றும் அதன் அபாயம் எனும் தலைப்பில் பேசவுள்ளார். உரையாடலில் கலந்து கொள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

6. **வீடு இல்லாமல் வீதிகளில் வசிக்கும் மக்களுக்கு உணவு அளித்தல் -** எதிர்வரும் 21/08/2024 புதன்கிழமை மாலை 6.00க்கு நமது பங்கும் மற்றும் SSVP -யும் ஒன்று இணைந்து வீதிகளில் வசிக்கும் வீடற்றவர்களுக்கு உணவு பகிர்ந்தளிக்கிறார்கள். இதற்கு பண உதவியோ அல்லது உணவு பகிர்ந்தளிப்பில் கலந்து கொள்ள விரும்பினாலோ,மேல் விபரங்களுக்கு (தமிழ் அப்போஸ்தலேட் ஒருங்கிணைப்பாளர்) – Mr. Steve Kolandasamy +60 12-713 3339 அல்லது SSVP Ms. Angela Chen +6019-778 9333. தொடர்புக்கொள்ளவும்.

7. எதிர்வரும் 08/09/2024 – ஞாயிற்றுக்கிழமை அன்னை மரியாளின் பிறந்த நாளை முன்னிட்டு, அவரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய சிறப்பு கருத்தரங்கு நமது பங்கில் நடைபெறவுள்ளது .அன்னை மரியைப் பற்றி தெரிந்து கொள்ள, இது ஓர் அருமையான வாய்ப்பு. காலை 7 முதல் மாலை 5 வரை ST.PETER அறையில் நடைபெறும். இது முற்றிலும் இலவசம். உணவுகள் வழங்கப்படும். இந்த கருத்தரங்கில் கலந்து கொள்ள அனைவரையும் வரவேற்கிறோம். இதன் பதிவு பாரங்களை நமது பங்கு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேல் விவரங்களுக்கு Sister.Ellen +6594600820 அல்லது Sister.Juaan +6591528119 தொடர்புக்கொள்ளவும்.

8. திருமணம் செய்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள், குறைந்தது 6 மாதத்திற்கு முன்பதாக பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவேண்டும். அதன்பின் குருவானவரை சந்தித்தப்பின் திருமணத்திற்கான ஏற்பாடு செய்யலாம். குறிப்பாக, நீங்கள் கத்தோலிக்க திருமண முன் தயாரிப்புப் பயிற்சியில் கட்டாயமாக கலந்துக்கொள்ள பதிவு செய்யவேண்டும்.

9. பங்கு மக்களின் கவனத்திற்கு -தேவாலய கட்டிட சீரமைப்பு பணி, விரைவில் தொடங்கவுள்ளது. ஆகவே திருமணங்கள் மற்றும் திருமுழுக்கு சடங்குகள் அனைத்தும் பங்கு மண்டபத்தில் நடைபெறும். கட்டிட சீரமைப்பு பணி தேதிகள் உறுதி செய்யப்பட்டவுடன் அறிவிக்கப்படும்.

10. அமலோற்பவ மாதா தேவாலய குடும்ப மாதாந்திர உறுப்பினர் பங்களிப்பு விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பித்தவர்கள் மட்டுமே,உங்கள் குடும்ப அட்டையை பங்கு அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

11. **வில்லா பாலோஸ்:** ஏழைக் குழந்தைகள் இல்லத்திற்கு உதவி தேவை! குழந்தைகளுக்கு உதவி செய்ய விருப்பம் உள்ளவர்கள் ,உங்கள் நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் பணமாக கொடுக்கலாம் அல்லது உணவு பொருட்களாக கொடுக்க விரும்புவோர்,வில்லா பாலோஸ் இல்லத்திற்கு சென்று அங்கே கொடுக்கலாம்.உணவு பொருட்களின் பட்டியல் தேவாலய நுழைவாயிலில் காணலாம். உங்கள் ஆதரவுக்கு நன்றி.

12. CARITAS MJD - (பேரழிவு மீட்புக் குழு - ஏற்பாட்டில் எதிர்வரும் 10/10/2024 முதல் 17/10/2024 வரை Tambunan, Sabah-வில் கரித்தாஸ் தனது சமூக பணிகளை அங்கு செய்யவுள்ளது. "பொது சேவை செய்ய ஆர்வம் உள்ளவர்களா நீங்கள்? ஆகவே கரித்தாஸ்வுடன் இன்னைந்து பணி செய்ய இது அறிய வாய்ப்பு. மேல் விவரங்களுக்கு caritasmjd.mjdiocese.my வலைத்தளத்தை பார்க்கவும்.